தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D., FSKV,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 22.07.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**மனிதத்திற்கு உயிர் கொடுக்கும் விதைப்பந்துகள்**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முதலாம் ஆண்டு இளநிலை நாட்டு நலப்பணித் திட்ட மாணக்கர்களால் சமுதாய நோக்கோடு விதைப்பந்துகள் எனும் உயிர்பந்துகள் 20.07.2019 அன்று வேளாண் கல்லூரியில் தயாரிக்கப்பட்டது. மழைச்சரலோடு மன்றாடி மனிதத்திற்கு உயிர்கொடுக்க மனிதத்தால் ஆன உயிர்பந்துகளே விதைப்பந்துகள்.

சமீபகால மாற்றங்களாலும், நகரமயமாதல் மற்றும் தொழிற்மயமாதல் காரணமாக மரங்கள் அழிக்கப்பட்டு பூமியே பாலைவனமாக மாறிவருவதை எவரும் மறுத்திட முடியாது. பருவநிலை மாறுபாட்டால், பருவமழையும் பொய்த்து வருகிறது. இச்சூழ்நிலையைச் சமன்படுத்த மாணவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மகத்துவமான முயற்சி இவ்விதைப்பந்துகள் என கருதப்படுகிறது.

மழை வளம் பெருக பல தொழில்நுட்பங்கள் இருந்தாலும் மரம் வளர்ப்பதே நிரந்தர தீர்வைத் தரும் என அறிந்து நாட்டு நலப்பணித்திட்ட மாணக்கர்களால் மேற்கொள்ளப்பட்ட இம்முயற்சி மகத்துவமான வெற்றியடையும் என நம்புகின்றோம். 200க்கும் மேற்பட்ட நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களால் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட வேப்பமர விதைப்பந்துகள் தயாரிக்கப்பட்டது. இவ்விதைப்பந்துகள் நாட்டு நலப்பணித் திட்ட மாணக்கர்களால் தத்தெடுக்கப்பட்ட வெள்ளமடை பஞ்சாயத்திற்கு உட்பட்ட கிராமங்களில் விதைக்கப்படும்.

முனைவர். M.R. பாக்கியவதி, நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் முனைவர் P.R. ரங்கநாயகி, பேராசிரியர் மற்றும் தலைவர், விதை அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை தலைமையில் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர்களான முனைவர் க. ராஜா, மற்றும் முனைவர் மு. கதிரவன் ஒருங்கிணைப்பில் நாட்டு நலப்பணித் திட்ட மாணக்கர்களால் விதைப்பந்து தயாரிக்கும் நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்